# பேரிகை

செய்தி மடல்


அன்பென்று கொட்டு முரசே! - மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும்- இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்
-மகாகவி பாரதியார்


கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் (கிளிநொச்சி மத்திய கல்லூரி) ஆண்டு-2014


## மத்திய மகா வித்தியாலயத் தாயே வாழ்க

இந்நிலத்தில் ஓர் மத்திய மகா வித்தியாலயம்
கிளிநொச்சி நகரத்தின - வித்தகர்களை
காலத்தின் சொத்துக்களை - எதிர்கால
சிற்பிகளை உருவாக்கிடும் - எம்
மத்தியகல்லூரித் தாயே வாழ்க
சத்தியத்தில் சிறந்தவராய் - உலக
சாதனையில் வென்றவராய் - நாளைய
தேசத்தில் சிறந்தவராய்
நாளும் போற்றிடும் வல்லவராய்
உருவாக்கிடும் தாயே வாழ்க
பாமரனை பண்புள்ளவனாகவும்
பண்புள்ளவனைத்தெய்வமாகவும்
மாற்றிடத்துடிக்கும் தாயே - நீயே
எதிர்கால சந்ததியின் ஏடு - என்றும்
அறியாமை இருள் போக்கி - ஆதவனாய்
ஒளியேற்றும் மத்திய கல்லூரித் தாயே வாழ்க.
நித்தமும் இம்மத்திய கல்லூரி மண்ணில்
-ஆயிரம்
அறிஞர்கள் ஊற்றெடுக்க வேண்டும் - என்றும்
மத்திய கல்லூரித் தாயின் மடியில்
விளைகின்ற பயிரெல்லாம் -உம்
நாமம் தொட்டு வணங்கிட
வேண்டும் தாயே!
உன்புகழ் திக்கெட்டும் பரவிட
அறிவுப்பூக்களால் மாலைகட்டி
அற்புத சொற்களால் கவிமாலை தொடுத்து
என்றும் உன் பாதம் தொட்டு
வணங்கி வாழ்த்துகிறேன்.

**திருமதி. உமாமகேஸ்வரி. விஜயகுமார்**
ஆசிரியர் (சித்திரம்),
கிளி/மத்திய மகா வித்தியாலயம்

## கல்லூரி முகப்பில் அழகுதரும் சரஸ்வதி சிலை





தமிழ்த்தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்கள் கல்வி அமைச்சர் மற்றும் விருந்தினர்களால் கௌரவிக்கப்பட்ட வேளையில்.....








மாகாணமட்ட 400M ஓட்டத்தில்
1ஆம் இடத்தைப் பெற்ற தரம் 9சேர்ந்த தே.டென்சிகா

## சகல வசதிகளையும் கொண்ட பாடசாலையாக கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் தரம் உயர்த்தப்படும். - கல்வி அமைச்சர் -

27.07.2014 ஞாயிற்றுக்கிழமை அன்று பாடசாலையில் நிறுவப்பட்டுள்ள புதிய கட்டடத் தொகுதியைத் திறந்துவைத்து உரையாற்றிய கௌரவ கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்கள் 1AB பாடசாலையாக உள்ள கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தை 1AB சிறப்பு நிலைப் பாடசாலையாகத் தரம் உய்ர்த்துவதாகவும் விரைவில் கணினித் தொகுதி வகுப்பறைத் தொகுதி, உள்ளிட்ட கட்டடத்தொகுதிகள் பலவற்றை நிறுவ நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டார். நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களும் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அவர்களும் பாராளு மன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான மு.சந்திரகுமார் அவர்களும் மத்திய மாகாண வலய கல்வித்திணைக்கள அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிளமைப் பருவத்தில் ஏற்படக் கூடிய சவால்களும் அதனைச் சமாளிக்கும் வழிமுறைகளும்



மனித வாழ்விலே இயற்கையாக நடைபெறும் வளர்ச்சிப் பருவங்களில் ஒன்றான கட்டிளமைப் பருவம் மிக முக்கியமான பருவமாக காணப்படுகின்றது. இப்பருவத்திலே தான் மனிதன் தனது எதிர்கால வாழ்விற்கான அத்திவாரத்தினை இட்டுக்கொள்கின்றான். குழந்தைப் பருவத்துக்கும் வளர்ந்தோர் பருவத்துக்கும் இடைப்பட்ட இம்மாறு நிலைப் பருவத்தில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். உடல்உள,சமூகரீதியான பல சிக்கல்களை எதிர்கொள்ளும் பருவகாலமாகையால் இப்பருவம் மிக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பருவமாகக் கருதப்படுகின்றது. கட்டிளமைப்பருவமானது மாணவர் என்ற கட்டமைப்புக்காலத்தில் ஏற்படுவதனால் கல்வியலாளர்கள் இப்பருவத்தினருக்கு சரியான வழிகாட்டல்களையும் சவால்களுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்ற அறிவுரைகளையும் வழங்க வேண்டியது கட்டாயமானது.

கட்டிளமைப்பருவமென்பது பத்து வயது தொடக்கம் பதினெட்டு வயது வரையான காலப் பகுதியை உள்ளடக்கியது என உளவியலாளர் குறிப்பிட்டுள்ளனர். பத்து வயதினைக் கட்டிளமைப் பருவ ஆரம்பம் எனக் கொள்ளலாம். இவ்வயதிலிருந்து தான் ஆண், பெண் இருபாலருக்கும் உடலியல் ரீதியாகபலமாற்றங்கள்ஏற்பட ஆரம்பிக்கும். இக்காலத்தில் படிப்படியாக ஏற்படும் உடலியல் வளர்ச்சி காரணமாக அவர்களிடையே அமைதியின்மை தோன்றும். அத்துடன் இவ்வளர்ச்சி ஆளுக்காள் வித்தியாசமாக அமைவதும் பிரச்சினைக்குரியதாகின்றது. பதின்மூன்று வயதிலிருந்து பெண்பிள்ளைகளுக்கு முகத்தில் பரு தோன்றுதல், பூப்பெய்துதல் முதலாக உடலில் ஏற்படும் திடீர் வளர்ச்சிகளும் ஆண்பிள்ளைகளுக்கு உடல்பருத்தல், முகம், மார்பு, கமக்கட்டு போன்ற பகுதிகளில் உரோமம் வளர்தல் போன்ற செயற்பாடுகளும் இவர்களுக்கு மனதில் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கும். தமது அனுபவங்களை ஏனையோருடன் பகிர்ந்துகொள்ள முடியாது குழப்பமான நிலைக்கு இவ்வயதுப் பருவத்தினர் ஆளாக நேரிடுகிறது. இப்பிரச்சினைகளை மையப்படுத்திய தற்கால விடயங்கள் பாடசாலை பாடப்பரப்புகளிலே ஒருபாட அலகாக சேர்க்கப்பட்டுள்ளமையால் ஆசிரியரின் அறிவுரைகளோடு தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். அதோடு நீண்ட நாட்களின் பின் அதாவது 16.17 வயதுகளில் இவ் உடலியல் மாற்றம் பழக்கப்பட்டு விடுவதால் 18 வயதளவில் இப்பிரச்சினைகளுக்குத் தானாக தீர்வு காணப்படும். அதேவேளை கட்டிளமைப் பருவ மாணவர்களில்ஏற்படும்உடலியல்மாற்றங்களுக்கு முகங்கொடுக்கையில் பல வினாக்கள் மனதில் எழும். தனது சகபாடிக்கு ஏற்பட்ட உடலியல் மாற்றம் தனக்கு ஏற்படவில்லை அல்லது ஏனை யோருக்கு ஏற்பட முன் தனக்கு ஏற்பட்டுவிட்டது என குழப்ப மடையும் நிலை தோன்றலாம். அதற்குக் காரணம்

1. போசணைமிக்க உணவு
2. பரம்பரை இயல்பு
3. உடற்சுபாவம்

என்பவற்றைக் குறிப்பிடலாம். இம் மூன்று காரணிகளாலும் தான் சிலரின் உடலியல் மாற்றங்களில் கால அளவில் வித்தியாசம் ஏற்படுகின்றது.

இதுவரை கட்டிளமைப்பருவத்தினரின் உடல் ரீதியான சவால்களை நோக்கினோம். இனி உளசமூக ரீதியான சவால்களைப் பற்றி கவனிப்போமாயின் இப்பருவத்திலுள்ளவர்களை சமூகம் நோக்கும் முறை பல சந்தர்ப்பங்களில் முரண்பாடுகளை ஏற்படுத்தும். இவர்கள் சிறுவர்கள். ஒன்றும் அறியாதவர்கள் என்ற நோக்கோடு சமூகம் இவர்களை மிக அவதானத்துடன் கண்காணித்த படி இருக்கும். ஆனால் இவர்கள் பெரியோரின் கட்டுப்பாடுகளிலிருந்து நீங்கி இருக்கவே முற்படுவர். அதோடு இவர்களில் பின்வரும் உள சமூக மாற்றங்கள் தோன்றும்.

- சமூகத்தில் தன்னை முழு உறுப்பினராக நோக்குதல்.
- சுயமரியாதை பேணுவதில் அக்கறை கொள்ளல்.
- தனியாக முடிவுகளை எடுத்தல்.
- தனது அழகில் கவனமெடுத்தல்.
- எதிர்ப்பாலார் தம்மை கவர்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபடல்.
- காதல் தொடர்புகளை ஏற்படுத்த விரும்புதல்.
- விருப்பத்துக்குரிய ஒரு நட்சத்திரத்தை பின்பற்றல் .
- வளர்ந்தோர் சமூத்தில் பிரவேசிக்க விரும்புதல்.
- புதுப்புது விடயங்களை கையாள முயலுதல்.
- பொது நலம் விரும்புதல்.
- பாலியல் விருப்பம் ஏற்படல்.

போன்ற இன்னும் பல மாற்றங்கள் இவர்களிடையே தோன்றும். இவ்வேளை களில் ஒரு பெரியாரின் தலையீடு காணப்படுமாயின் அதாவது இவர்களின் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு குழப்பம் ஏற்படின் வன்முறை மற்றும் தற்கொலை, கல்வியை இடைநிறுத்தல் போன்ற இடர்பாடுகளை எதிர்கொள்வர்.

இவ்வாறான உள சமூக மாற்றங்களில் குழம்பியிருக்கும் மாணவர்களை பாடசாலைகளில் ஆசிரியர்கள் சரியான வழியில் நடாத்தி செல்லுதல் இன்றியமையாதது. அவர்களிடையே ஏற்படும் உளமாற்றங்களுக்கு மதிப்பளித்து தமது கட்டிளமைப் பருவ அனுபவங்களை வெளிப் படையாக மாணவருடன் உரையாடி அவர்களின் மனவெழுச்சிகளினை காரணகாரியங்களுடன் விளக்கி எதிர்கால நற்பிரசையாக வளர்த்தெடுக்க வேண்டும். பெற்றோரிடம் பகிரமுடியாத சில விடயங்களை ஆசிரியரிடம் துணிந்து கதைப் பதற்கு ஆசிரியர்கள் துணை நின்று அவர்களை நல்வழியில் இட்டுச் செல்லவேண்டும். உதாரணமாக 16.17 வயதில் காதல் தொடர்புகளை ஏற்படுத்த விரும்பும் ஒரு பிள்ளையை கண்டறிந்து இப்பருவத்தில் சாதாரணமாக எல்லோருக்கும் ஏற்படும் எதிர்ப்பால் கவர்ச்சி என்பதை விளக்கி இதனால் எந்த நன்மையும் இல்லை என்பதனை யும் பலரின் அனுபவக் கதைகளை கூறி அப்பிள்ளை யின் சிந்தனையை வேறு அழகியல் துறைக்குள் உள்வாங்கி அவரை ஈடுபடச் செய்வதால் காலப் போக்கில் அப்பிள்ளை காதல் தொடர்புகளை மறந்து வேறு பொழுது போக்கில் ஈடுபடத் தொடங்கிவிடும்.

இவ்வாறான பிரச்சினைகளை கையாளும் போது மாணவர்களைப் பேசுவதோ, கேலி செய்வதோ, பலரின் மத்தியில் கதைப்பதோ கூடாது. நம்பிக்கை உள்ள ஆசிரியராக நடந்து கொள்வது மிகவும் அவசியம். அதேபோன்று இப்பருவத்திலுள்ள மாணவர்கள் பாடசாலைகளில் ஆசிரியர் வகுப்புகளுக்கு போகமுடியாதபோது அவர்கள் வெளியில் திரிந்து வம்புகளை வளர்ப்பது தவிர்க்க முடியாதது. குறிப்பாக கட்டிளமைப்பருவ உயர்தர மாணவர் சிலர் வகுப்புகளைவிட்டு நீங்கி களவாக வீடு செல்லுதல், பாடசாலை சொத்துகளை நாசம் செய்தல் போன்ற ஏற்கமுடியாத செயற்பாடுகளில் ஈடுபடுவர். அவர்களை பாடசாலையின் இணைப்பாட விதான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கும்போது அவர்கள் சந்தோசமாக பாடசாலையில் நேரத்தை செலவிடுவர். அதேவேளை கட்டிளமைப்பருவம் சரியான வழியில் நடாத்தப்படும்.

மேலும் கட்டிளமைப்பருவத்தினர் உள சவால்களின்போது ஏனையோருடன்ஏற்படும் பிரச்சினைகளில் திறந்த மனதோடும் விட்டுக்கொடுப்புகளுடனும் சுமுகமாகத் தீர்வுகாணும் பயிற்சியையும்,கடவுளுக்கு விசுவாசமான உள்ளத்தையும் கொண்டிருந்தால் எதிர்கால வாழ்வியலுக்கு சரியான அத்திவாரம் இடப்பட்டமை உறுதியாகிவிடும். காத்திருக்கும் எதிர்காலத்தை ஒளிமயமாகவும் பொன்விளைவதாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் ஆக்க முயலுங்கள் அதற்கு ஏற்ற வகையில் உடலையும் உள்ளத்தையும் நலமாக பேணுங்கள்.

"நாளைய உலகம் உங்கள் கைகளில் அது
உங்களுக்காக மட்டுமல்ல முழு உலகத்திற் காகவும்"

**உசாத்துணை**


1. எஸ். முத்துலிங்கம் - கல்வி உளவியல் - யாழ்ப்பாணம் 1980
2. கல்வி உளவியல் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
3. இணையத்தள தகவல்கள்



**திருமதி. லோ.திருக்குமார்** (Dip in phy. Edu)
ஆசிரியர்,
(கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரிகை

செய்தி மடல்

தொலைபேசி : 021 228 5115
மின்னஞ்சல் : info@knkcc.com
இணையம் : www.knkcc.com
வெளியீடு : ஊடகப் பிரிவு.
கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்

ஆலோசனையும் நெறிப்படுத்தலும் : மு. இரவீந்திரன் (அதிபர்)
இதழாசிரியர் : ந. குகபரன்
பொறுப்பாசிரியர் : அ. சத்தியானந்தன்
நிர்வாக ஆசிரியர் : ப.ஜோயல் பியசீலன்


இளையதலை முறையினரின் நடத்தை சார் போக்கில் ஏற்பட்டுவரும் முரண் நிலைக்கு பல்வேறு காரணிகள் பின்னணியாக உள்ளன. அறிவுப் பெருக்கம் ஒருபுறம் பல்வேறு வழிகளில் விரிந்து வருகின்ற பொழுதும் பண்பாட்டு விழுமியத்துடன் அவற்றை இணைத்துச் செல்வதில் முன்னேற்றம் நிகழ்வதாயில்லை. சமூகத்தின்பொது மனநிலையில் பரீட்சைகளில் பெறும் வெற்றிகள் குறித்துச் செலுத்தும் அக்கறை பண்புசார் நடத்தையில், திறன் விருத்தயில் கவனம் பெறுவதாயில்லை.


உலகமயமாதலின் விளைவுகள் எமது நுகர்வுக் கலாசாரத்தில் பெரும் பாதிப் பினை ஏற்படுத்தி வருகின்றன. உலகின் போக்கிற்கேற்ப ஒத்தோடிகளாக இயங்க வேண்டியது தேவையே எனினும் ஆக்க வழிமுறைகளை உள்வாங்கும்போது பண்பாட்டுத் தனித் தன்மையைப்பேணும் வகையில் பொருத்தமானவற்றை ஏற்று வேண்டாதவற்றைப் புறந்தள்ளும் தெளிந்த பார்வை அனைவரிடத்திலும் வளர்ச்சிபெறவேண்டும். திறன் விருத்தி, ஆரோக்கியமான சமூக ஊடாட்டம், நெறிமுறையான வாழ்க்கை முதலானவற்றின் உயர்விற்கு கல்வியே அடிப்படை என்ற புரிதல் அனைவரிடத்திலும் ஏற்பட வேண்டும். பண்புவிருத்தி என்பது அபிவிருத்தியின் ஒரு குறிகாட்டியாகும். ஒழுக்கநெறியே சமூகத்தின் உயிர்ப்பிற்கு அடித் தளம் அமைதியான, வளமான, அர்த்தமுள்ள வாழ்க்கைக்கான தயார்ப்படுத்தலில் கல்விச்சாலைகளுக்கு அதிகமான பொறுப்பு உண்டு. சமூகத்தில் பரவிக்கிடக்கும் சீர்குலைவிற்கான காரணிகளை வெற்றிக் கொண்டு வாழ்வின் திசைகள் வெளிக்க அனை வரும் கூட்டுப் பொறுப்போடு உழைப்பது காலத்தின் தேவையாகும்.



## விழிப்பூட்டல் கருத்தரங்கு

இலங்கைப் பொலிஸ் பிரிவும், சிறுவர் பாதுகாப்பு நிறுவனமும் இணைந்து மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் போக்குவரத்து விதிமுறைகளைத் தெளிவுபடுத்தும் முகமாக கருத்தரங்கொன்றை மேற்கொண்டனர். காணொளியின் துணையுடன் விளக்கங்கள் முன்வைக்கப்பட்டன.

# நினைவூறித் ததும்பிய விழியோடு...



**1991ம்**
ஆண்டின்
சித்திரை மாத
முழு நிலாக்
காலம். எனக்கு
நன்றாக ஞாபகமிருக்கிறது.
அது ஒரு புதன்கிழமை
இளமைக்கால இனிய நினைவுகள்
பூத்துக் குலுங்கிய பதின்மவயதுப் பருவம். அன்று, பாடசாலையின் கலைவிழா நடைபெற ஏற்பாடாகியிருந்தது. பாடசாலை வளவெங்கும் விழாக்கோலம் மாணவர்களின் முகத்திலும் ஒரே பூரிப்பு. நான் நாடகக் குழுவில் பங்குபற்றினேன். "தாயுமாய் நாயுமானார்." குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் நாடகப் பிரதியை செ.விந்தன் ஆசிரியர் நெறிப்படுத்திய நாடகத்தில் நான் பிரதான பாத்திரம். ஆண்களும், பெண் களும் சேர்ந்து நடிக்கும் நாடகம் நான் உயர்தர வர்த்தகப் பிரிவில் கல்விகற்ற காலம் இரண்டு கிழமையாக கடுமையான நாடகப்பயிற்சி நடைபெற்றது. ஒழுக்கமும், பண்பாடும் சேர்ந்தது தான் நாடகப் பயிற்சி. எங்களுக்கோ மேடையில் பலர் முன்னிலையில் எமது ஆற்றலை காட்ட வேண்டும் என்ற சொல்லொணா ஆசை, கிராமிய இசை, குழுநடனம், கிராமிய நடனம், இசைக்கச்சேரி எனப் பல கலை நிகழ்ச்சிகளும் நடாத்த ஏற்பாடாகி இருந்தது. பாடசாலை மாணவர்களுக்கு ஒரு காட்சி மாலையில் பெற்றோர்களுக்கு ஒரு காட்சி என இரு காட்சிகள் நிகழ்த்தப் பெரும் ஏற்பாடு.

ஒழுங்கமைப்பு, உபசரணை, மேடை நிர்வாகம் என அனைத்து கடமைகளிலும் நானும் எனது நண்பர்களும் ஆசிரியர்களும் ஓய்வு ஒழிச்சல் இன்றி ஈடுபட்டோம். எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியானது. கலைவிழா அன்று காலை விடிந்தது. கிளிநொச்சியில் அன்று புறச் சூழல் சற்று பதற்றமாக இருந்தது. நாம் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. தூரத்து முழக்கங்கள் எமக்கு பழக்கமான நாளாந்த விடயங்கள்தான்.

மண்டபம் நிறைந்த மாணவர்கள் மத்தியில் கலைவிழா ஆரம்பமானது நடனம், பாட்டு என நிகழ்வுகள் பெருத்த கரகோசத்துடன் நிறைவு பெற, எமது நாடகம் மேடை ஏறியது. முதற்காட்சி கோயில் திருவிழா. மேடையில் நாம் நிகழ்த்திக் காட்ட மண்டபத்தில் நிசப்தம். ஆர்வமுடன் பார்த்துக்கொண்டு இருக்க, ஒரு மூன்று நிமிடம் தான் நடித்து இருப்போம் ஆரோகரா.. ஆரோகரா.. என நாம் மேடையில் நடிக்க "திடும் மிடும்" என பாரிய சத்தம் கேட்டது. வானத்தில் ஒரே இரைச்சல். பிரதான மண்டபம் அதிர்ந்தது. கண்ணாடிகள் சிதறின. வான வல்லூறுகள் வட்டமிட கிளிநொச்சி நகரம் அதிர்ந்தது. மாணவர்கள் சிதறி ஓடினர். எங்கும் அபயக்குரல்கள். மேடையில் நாம் அதிர்ந்து நிற்கிறோம். செய்வது அறியாது வேட உடை ஒப்பனையோடு.

எமக்கு நாடகம் பழக்கிய ஆசிரியை திருமதி. இராஜமனோகரி பதறியபடி ஓடுகிறார். நானும் ஓடுகிறேன். அப்போது எமது கல்லூரியில் இருந்த பதுங்குகுழியில் மாணவர்கள் பாதுகாப்புத் தேடினர். நானும் சில நண்பர்களும் வானத்தினைச் சுற்றிச் சுற்றிப் பார்த்த வண்ணம் கருகிய ஆசைகளை அள்ளிச் செருகியபடி அலைபடும் பறவைகளாய் வதைபட்ட அந்தக் கணங்களை நினைத்துப் பார்க்கின்றோம். எல்லாம் ஒரு பத்து நிமிடத்தில் அடங்கிப் போகிறது. அன்றைய சாவுச் செய்தி மெல்லமெல்ல வந்துசேர அடுத்த சிலமணி நேரத்தில் பாட சாலை வெறிச்சோடியது. நானும் எனது சில நண்பர்களும் மட்டும் இந்த மேடையில் அன்று அமர்ந்து வாய்விட்டு அழுத அந்த ஞாபகங்களை இன்றும் பொத்தி வைத்திருக்கின்றோம்.

**திரு.அ. சத்தியானந்தன்**
ஆசிரியர்

## நிஜங்கள்



பொய்மைகளின் பிடியில்
பொம்மைகளாய்
பொழுது போக்கும்
பொய்யர்களின் நடுவில்
நிழலைப்போல் தான்
நிஜங்களைக் காண்கின்றேன்

பொய்களும் போலிகளும்
நிஜங்களைப் புசிக்க
நிர்க்கதியாகிறது வாழ்வு
நிம்மதி தொலைந்து.

வம்பென்ற பொய்க்குள்
அன்பென்ற நிஜமும்
வேசம் என்ற பொய்க்குள்
பாசம் என்ற நிஜமும்
காணாமல் போகின்றன.
தேன் எடுத்த வண்டு
ஏன் என்று கேளாமல்
பேன்களைப் போலவே
குருதியைக் குடிக்கிறது
சிதைந்து போன பூவை
வதைக்கின்றன மரங்கள்
பதைக்கின்றன மலர்கள்
செய்வது தெரியாமல்

சிலம்பிழந்த கண்ணகி
புலம்பினாள் நீதி வேண்டி
துலங்கியது பதில்
மதுரை நகர் தீய்த்து

இன்றைய கண்ணகிகள்
புலம்பிடும் புலம்பல்களால்
புல்லர்கள் மனங்கள் கூட
புல்லரிக்கப் போவதில்லை

நவீன நூற்றாண்டின்
நேற்றைய சீதைகள்
இன்றைய கண்ணகிகள்
நாளைய அகலிகைகளின்
காத்திருப்பு தொடர்கின்றது
எதிர்பார்த்து நிஜங்களை.

செல்வி. விதுஜா கிருஸ்ணா
2015. தொழில்நுட்ப பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம். ஒரு பார்வை



பா.சிந்துஜா, கலைப் பிரிவு, 2015

சீ பேரதீவாம் இலங்கை நாட்டில் வட புலத்தில் அமைந்துள்ள எழில்மிகு மாவட்டமான கிளிநொச்சியின் கரைச்சிப் பிரிவில் புளியம்பொக்கணை எனும் கிராமத்தில் மிகவும் சரித்திரப்புகழ் வாய்ந்த ஓர் ஆலயமாக புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயம். அற்புதம் நிறைந்ததும். அருள் நிறைந்ததும். பழைமை வாய்ந்ததாகவும் விளங்குகின்றது.

இவ்வாலய பிரதம குருவாகவும். ஆலய ஸ்தாபகருமாக இருந்து இறைபதம் எய்திய அமரர் நாகமுத்து வீரகத்திபிள்ளை ஆலய தல புராணத்தை அருளிச் செய்தவராவார். தற்போது சிவாகமகிரிபூஷணம், சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜா பிரதம குருவாக இருக்கின்றார்.

வருடாவருடம் வரிசை வரிசையாக பொங்கல் பானைகள் கொணர்ந்து பங்குனித்திங்களை வெகுவிமர்சையாக கொண்டாடுகின்றமை ஒரு விஷேட அம்சமாகும். இத்தினத்தன்று தலபுராணம் வாசிக்கும் ஒரு நிகழ்வும் நடைபெறுகின்றது.

குளங்களும், ஆறுகளும், காடுகளும், பூஞ்சோலைகளும் சூழப்பெற்ற இவ்வாலயத்தின் அரச மரத்து நிழலில் அமர்ந்து அருள்பாலிக்கும் நாகதம்பிரானின் அளப்பெரிய அற்புதங்கள் பலவாகும். அரச மரத்தின் ஒவ்வொரு கிளையிலும் அடியார்களின் நேர்த்திகள் கட்டித்தொங்க விடப்பட்டுள்ளன.

"திங்கள் நேர்சடை யுந்திரி யம்பக" என்று ஆலயத் தலபுராணம் ஆரம்பிக்கின்றது. கந்தபுராணத்தினையும் இணைத்து ஓதி இன்புறுகின்ற இவ்வூர் மக்களே இக் கோவிலின் பெருவளர்ச்சிக்கு ஊன்று கோலாவார்கள். இப்படிப்பட்ட சிறப்புக் கொண்ட ஊரில் இந்த புளியம் பொக்கணை ஆலயம் உருவானமை சிறப்பு வாய்ந்ததாகும்.

நீதி நாயக முதலியாரது நீண்ட கால வேண்டுதலின் பின் அவர் மனைவி கமலம், கற்பம்தரித்து இரண்டு புத்திரரர்களையும் பெற்று அன்புற வாழ்ந்து கொண்டிருக்கையில் பெண் குழந்தைபெற விரும்பி மீண்டும் கமலம் அம்மையார் கர்ப்பமுற்று ஒரு பெண் குழந்தையையும் இணைத்தே ஓர் பாம்புக்குட்டியையும் பெற்றெடுத்தார். என்றும் பாம்பென்று பிரிவினை காட்டாது தம் பிள்ளைகள் போல வளர்த்து வருகையில் ஒரு முறை தாயின் உடம்பில் ஏறி விளையாடும் போது கோபத்தில் " தொலைந்து போ " என கூறியதையடுத்து மனங்கலங்கி தாய் பேச்சை மதித்து சப்தம் எதுமின்றி புதூரினை அடைந்தது தம்பிரான் எனும் அப்பாம்பு என்பது செவிவழிக்கதை. பின்னர் ஒரு நாள் முதலியாரது கனவில் சிவன் தோன்றி புதூரில் தம்பிரான் இருப்பதை அறிவிக்க மனமின்பமுற்று அங்கு சென்று தம்பிரானை தரிசித்தார். இவ்வாறு தனது தரிசனத்தை தன்னாயுள் முழுவதும் செய்து வயது முதிர்ந்த நிலையில் இறைபதமடைந்தார்.

இவ்வாலயத்தில் ஒரு முறை மக்கள் பொங்குவதற்காக கூடியிருந்த வேளையில் ஒல்லாந்தரது அக்கிரமங்களும் குறைவின்றியிருக்க, தெய்வத்தைப் பழித்தவர்களுக்கு பாடம் புகட்டும்படியாக அக்காலத்தில் பூசகராக இருந்தவர் சிவனை வேண்டி வெள்ளிப்பாம்பு சிலையொன்றையும் பெற்று ஒல்லாந்தரிற்கு தெய்வ மகிமையூட்டி அவர்களுக்கும் அருள் கிடைக்குமாறு செய்தார்.

இன்றும் ஆயிரக்கணக்கான பக்தர்களை தன்வசம் கொண்ட புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம் தமிழர்களின் ஒரு சமய அடையாளம் என்றால் அது மிகையாகாது. ஒவ்வொரு முதல் பங்குனித்திங்களில் இக்கோவிலில் இடம்பெறும் பொங்கலை காண்பதற்குத் திரளும் பக்தர் கூட்டத்திற்கும் குறைவில்லை. இது இத்தலத்தின் பெருமையன்றே கூறவேண்டும்.

# கண்காட்சியும் கருத்தரங்கும்





16.03.2014 அன்று ஈழத்தில் வெளி வந்த, வெளி வந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகள் தொடர்பான கண்காட்சியும். கருத்தரங்கும் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் ஆசிரியர் திரு. அ. சத்தியானந்தம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் வாழ்த்துரையினை கல்லூரி அதிபர் வழங்கினார். கலைமுகம் ஆசிரியர் செல்மர் எமில். ஜீவநதி ஆசிரியர் பரணீதரன் விமர்சகர் சி.ரமேஸ் ஆசிரியர்களான ப.ஜோயல் பியசீலன் (அநாமிகன்) குகபரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு உரையாற்றினர். நிகழ்வில் ஈழத்து சஞ்சிகைகள் பற்றிய சுருக்கக் கையேடு ஒன்றும் வழங்கப்பட்டது.

# தேசியமட்டத்தில் சாதனை புரிந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு

16.05.2014 அன்று கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் மு.இரவிந்திரன் தலைமையில் தேசியமட்ட சாதனைப் பிள்ளைகளை கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது. 2013ம் ஆண்டு அகில இலங்கை தமிழ்மொழித்திறன் போட்டியில் தமிழறிவு வினா - விடைப் போட்டியில் எமது கல்லூரியின் மாணவர் தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்றனர். கல்லூரியின் வரலாற்றின் நீண்ட இடைவெளியின் பின்னர் நிகழ்ந்த ஒரு தேசிய மட்ட சாதனை இதுவாகும். வெற்றியாளர்களை கௌரவிக்கும் இந்நிகழ்வுக்கு **உதவும் உறவுகள்** அமைப்பு நிதி அனுசரணை வழங்கியது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிக கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் T.வேல்நம்பி அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கும் வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கும் வெற்றி பதக்கங்களையும், பணப் பரிசில்களையும் வழங்கி வைத்து உரையாற்றினார். நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் விளையாட்டு, மற்றும் க.பொ.த உயர்தர பரீட்சையில் சிறப்புநிலை பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவுகள் கனத்த போது

உயிர் வலிக்கின்றது
உடல் கொதிக்கின்றது
சிற்றிதயத்தின் துடிப்பு
சிறு நொடிகளை மிஞ்சுகின்றது

சிதறுண்ட கண்ணாடித்துகள்களாய்
சிறு உள்ளம் சிதறித்துடிக்கின்றது
மோதும் தென்றலில் ஏன் இந்த இரத்த வாசனை ?
தயக்கமாய் தொடும் கடலலைகளில்
ஏன் கேட்கின்றது இந்த ஓலம் ?
இத்தனைக்கும் பதில் தெரியும்.
எனினும் உதடுகள் அசைவற்றுக்கிடக்கின்றன.
காரணம் நம்ப முடியவில்லை என் வார்த்தைகளை
இல்லை இல்லை எம் வார்த்தைகளை ( அவர்களால் )

தெளிந்த பால் நிலவாய்
நெஞ்சை வருடிச் செல்கின்றன
எம் இனிய நினைவுகளும் ஆறாத் துயர்களும்.
அத்தனையும் மறக்கச் சொல்கிறார்கள் ( அவர்கள் )
எத்தனை கைகள் மறைத்தாலும்
அந்தப் பால் நிலவு மறைந்து போகாதென்று
அவர்களுக்கு தெரியவில்லை போலும்
இல்லை தெரிந்தும் தெரியாதவர்களாய்
பாசாங்கு செய்கிறார்கள் போலும்

ஒரு கணம் இமை மூடுகின்றேன்.
ஓராயிரம் நினைவுகள்
இமைகளினோரத்தில் சிறகடித்துச் செல்கின்றன
ஓலைக்குடிசைக்குள்
குருவிக்குஞ்சுகளாய் வாழ்ந்த காலங்கள்
ஓடும் மழைநீரில்
காகிதக் கப்பல்களை இடம் நகர்த்திய பொழுதுகள்
தொலைந்து விட்டன எனவறிந்தும்
இன்னும் தேடிக்கொண்டிருக்கின்றேன்.

நாளை ஒரு பொழுது
நம[illegible]மா?
ரத்தத்துடன் [illegible] விழிகள்
தொலைந்தவற்றை இழந்து விட்டோம்
இழந்தவற்றை பிரிந்து விட்டோம்
பிரிவுகள் கனக்கின்றன.
ஆழ்மனது வலியிழந்து தவிக்கின்றது
திரைப்படத்தில் வரும் திரைக்கதையல்ல இது.
காலக்குளத்தில் வாடாத மொட்டுக்கள்
காவிய நெஞ்சம் தன்னை
மரத்துக் கிடக்கும் அவலத்துயரங்கள்
ஆறாத காயங்களும் தழும்புகளும்
வலிக்கவில்லை இப்[illegible]
பிரிவுகள் வலிக்கின்றன

தாயின் கருவறைக்குள்
சிசுவாய் உதிர்த்த பொழுதுகளில் எண்ணினேன்
எனக்கான உலகில்
சுதந்திரமாய் தவழ வேண்டும் என்று
சோகங்களால் திளைத்த பின்
இன்று என் மனம் தேடுகின்றது
தாயின் கருவறையை
அவள்,
நிசப்தமாய் கல்லறைக்குள்
கண்ணுறங்குகிறாள் எனத் தெரிந்தும் கூட.
நீலக்கடலில்
பரவசமாய் துள்ளித்திரிந்த மீன் கூட்டங்கள்
என்ன காரணமோ தெரியவில்லை
இன்று புழுப்பிடித்து கரையொதுங்குகின்றன
எத்தனையோ கனவுகளுடன்
பெற்றெடுத்த அன்னைக்கும் தந்தைக்கும்
நல்லதொரு மகளாய்
வாழ ஆசைப்பட்டேன்
ஆசைகளும் நனவாகியது
ஆனால் நல்லதொரு மகளாக இல்லை
பிரிவால் நொருங்கிய அநாதையாக .......
நிம்மதியில் தோற்றும் போனவளாக.....
நிஜத்திலும் ஆதரவற்றவளாக......

ஆடம்பர வாழ்க்கை கேட்கவில்லை
அலங்காரப் பொருட்களும் கேட்கவில்லை
வண்ண ஆடைகள் கேட்கவில்லை
வித வித உணவுகள் கேட்கவில்லை
பட்டு மெத்தை கேட்கவில்லை
பஞ்சுத்தலையும் கேட்கவில்லை
ஒரு நிமிடம் ஒரே ஒரு நிமிடம்
கண்ணுறங்க தாயின் பொன்மடி கேட்கிறேன்
இறுதியாய், தந்தையின் உதடுகள் உதிர்த்த
அந்தப் புன்னகையைக் கேட்கிறேன்
கிடைக்குமா? ஏங்குகின்றன விழிகள்

சு. இனனி 2015 வர்த்தகப் பிரிவு



## சிந்தித்துப் பார்...

- ❖ உங்களை வளப்படுத்திக்கொள்ள அதிக நேரம் செலவழியுங்கள் மற்றவர்களை விமர்சிக்க நேரம் இல்லாமல் போகும்.
- ❖ சாபம் எனப்படுவது மேல் எறியப்பட்ட கல்லைப்போன்றது அது எறிந்தவன் தலைமேலே வந்து விழும்.
- ❖ நன்கு கல்வி கற்றவன் தனக்குத்தானே ஒரு நல்ல நண்பனாக நடந்து கொள்வான்.
- ❖ கீழ்படிவதற்கு கற்றுக்கொண்டால் கட்டளையிடும் பதவி தானாகவே வந்து சேரும்.
- ❖ பழிக்குப்பழி வாங்குவதற்கு சிறந்தவழி மன்னித்து விடுவது தான்.
- ❖ உற்சாகத்துடன் இருக்க தொடங்குவது தான் வெற்றிகரமான வாழ்க்கை வாழத்தொடங்குவதற்கான முதல் அறிகுறி.
- ❖ உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளே உள்ளன.
- ❖ வாழ்க்கையில் திரும்ப பெற முடியாதவை உயிர், நேரம், சொற்கள்.
- ❖ நேரத்தை வீணாக்கும் போது கடிகாரத்தைப் பார் ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை

நவநீதராசா. நதுஜா

## வீட்டினில் விளையாடும் விஞ்ஞானம்

✧ காய்கள், கீரைகளை பச்சையாக உண்ணும் போது அவற்றை உப்புநீரில் கழுவுதல் வேண்டும்.

உப்பு நீர் செறிவு கூடியதாகையால் காய்கள், கீரைகள் இருக்கும் நுண்கிருமிகள் புறப்பிரசாரணம் மூலம் நீரை இழந்து இறந்துவிடும். எனவே அவற்றை உண்போருக்கு நுண்கிருமித்தாக்கம் ஏற்பட மாட்டாது.

✧ மின்னலேற்படும் பொழுது வானொலி தொலைக்காட்சிக் கருவிகளின் அன்ரனாக்களின் தொடுப்பகற்றப்பட வேண்டும்.

முகில்கள் ஒன்றுடன் ஒன்று உராயும் பொழுது அவை நிலை மின்னேற்றம் பெறுகின்றன. இவ்வாறு அதிகளவு ஏற்றங் கொண்ட முகில்கள் புவிக்கு அண்மையில் வரும் பொழுது அவ் ஏற்றங்கள் புவி மீதுள்ள மிக உயரமான கடத்திகளில் இறங்குகின்றன. அன்ரனாக்கள் மீது இவ் ஏற்றங்கள் இறங்குமாயின் கருவிகள் பழுதடைந்து விடும். எனவே அன்ரனாக்களின் தொடுப்பு அகற்றப்பட வேண்டும்.

✧ மூடைகளை தலையில் சுமப்பதை விட முதுகில் சுமப்பது இலகுவானது

தலையின் பரப்பளவை விட முதுகின் பரப்பளவு அதிக மாகும். மூடையின் நிறை காரணமாக தலையில் ஏற்படுத் தப்படும் அமுக்கத்தைவிட முதுகில் ஏற்படுத்தப்படும் அமுக்கம் குறைவாகும் அமுக்கம் என்பது அலகு பரப்பு மீது தாக்கும் விசையின் அளவாகும். பரப்பளவு கூட்டப்படுவதால் அமுக்கம் குறைந்து வலியும் குறைவாகும்.

செல்வி.க.சுரனுதா (ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகிந்தோதைய தொழில்நுட்பகூட கட்டட அடிக்கல் நாட்டும் நிகழ்வானது 26.06.2014 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளரும் ஆன முருகேசு சந்திரகுமார் அவர்கள் கலந்துகொண்டார். தொழில்நுட்ப பாடத்தின் முக்கியத்துவம் குறித்து தனது உரையில் சுட்டிக் காட்டிய பாராளுமன்ற

# தொழில்நுட்ப பாடத்தின் முக்கியத்துவத்தை மாணவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்



கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
**மு. சந்திரகுமார்**

உறுப்பினர், வடபுலத்தில் நிலவும் சமனற்ற ஆசிரியவளப் பரம்பல் சீர்செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

2014 தமிழ்த்தினப் போட்டியில் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் கல்லூரியின் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மேம்படுத்தும் வகையில் புதிதாக இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைத் தொகுதி அமைத்துத் தரப்படும் எனவும், பிரதான மண்டபத்தில் தரையில் இருக்கும் மாணவர்கள் இருக்கைகளில் இருந்து நிகழ்வுகளைப் பார்ப்பதற்கு வசதியாக தேவையான கதிரைகள் அனைத்தையும் தான் வழங்கவுள்ளதாகவும் அடுத்த தடவை கல்லூரிக்கு தான் வருவதற்கு முன்பதாக இவ்வசதி கிடைப்பதற்கு வழிசெய்யப்படும் எனவும் குறிப்பிட்டார்.

## வளம் கொழிக்கும் பூமி

ஈழமணித்திருநாட்டின் வடபாற் தினை யுராம்
வன்னிமா நகரின் கிளிநொச்சி பெரும்பரப்பாம்
நீர்வளம் நிலவளம் நிறை நகர்
நீர்மலி நிறையுராம் வளம் கொழிக்கும் நகர்.

வானுயர் சோலைகளும் கனிதரும் மரங்களும்
நிறைவள நகரம் கிளிநொச்சியாம்
இரணைமடு கங்கையின் நீரின் மிகையால்
ஏர் உழவர் பயிர் செய்து அன்னம் ஊட்டும் மண்
பசுமை புரட்சி இல்லை பெண்மை புரட்சி இல்லை
எல்லா இல்லமெங்கும் நிறைகுடம் போல்
நிறைந்து பொலிந்து வளங்கொளிக்கும் பூமி
வானவர் வாழ்த்திடும் மண் எம்மண்

வருடம் இருமுறை செந்நெல்விளையும்
ஆலயங்களில் மணி ஓசை காலையில் ஒலித்திடும்
கொல்லையில் நறுமணம் வீசும் மலர்கள்
தென்றலுடன் அதிகாலையில் கமழ்ந்து வந்துவிடும்

இயற்கை அன்னை தந்த செல்வம்
இந்த மானிட ஜென்மம் இனிதாயும் புனிதமாயும்
வாழ்ந்திடவே இறைவன் எமக்கு அளித்த
அரும்பெரும் அழியாச் செல்வம் எம் இடமடா.

ஆறறிவு பெற்ற மானிடமே மேலும் அறிவை வளர்த்திடவே
ஆரம்ப பாடசாலை தொட்டு சர்வதேச பாடசாலை
வரைக்கும் கல்வியைப் பயின்றிடவே பலநூறு கல்விக் கூடங்களும்
நிறைந்தது நம் நகரம்.

**அபிநயா,** தரம் 12 கலைப் பிரிவு

## மணிவாசகர் குருபூசை தின நிகழ்வு

கல்லூரியின் இந்துமாமன்றப் பொறுப்பாசிரியர் திருமதி.வ.விமலேந்திரன் தலைமையில் 02.07.2014 அன்று மணிவாசகப் பெருந்தகையின் குருபூசைதின நிகழ்வு நடைபெற்றது. மாணவர்கள் திருமுறை ஓதி சிவபுராணம் இசைத்ததன் பின்பு சிறப்பு உரை இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட சைவமங்கையர் கழகச் செயலாளர் திருமதி செ.சோமசேகரப் பிள்ளை அவர்கள் உரை நிகழ்த்தினார். மாணவர் கள் அறநெறி. ஒழுக்க விழுமியங்கள். சமய பாரம்பரியங்களை கடைப் பிடித்தலின் அவசியம் தொடர்பாக உரையாற்றிய அவர் கிரகித்துச் செவிமடுத்த மாணவியொருவருக்கு புத்தகமொன்றையும் பரிசாக வழங்கினார்.



## 2013 க.பொ.த சாதாரணதர பரீட்சையில் சிறப்புப் பெறுபேறு பெற்ற மாணவர்கள்

| பெயர் | பெறுபேறு |
|---|---|
| சகாயராஜா அனோஜன் | 8A B |
| சந்திரசேகரம் சோபனப்பிரியன் | 8A B |
| நாகேந்திரம் கேசவராஜ் | 6A 3B |
| இராசகுலம் இலக்கியா | 6A B2C |
| இராஜ்குமார் அகப்பரிதி | 5A 3BC |

## மாகாணமட்ட மரதன் ஓட்டம்




இ. கேதீஸ்வரன் - 6ஆம் இடம்
அ. டம்சிகா - 9ஆம் இடம்
எஸ். ஜெனிற்றா - 10ஆம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# எமது மாணவர்கள் தேசப்பற்றுடன் ஆளுமையுள்ளவர்களாக உருவாக்கப்பட வேண்டும்

**கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்**

எமது கல்லூரியில் 'பாண்ட்' அணியினரின் ஆற்றுகை நிகழ்வொன்று 23.01.2014 அன்று மைதானத்தில் நடைபெற்றது. இவ் அணிவகுப்பு ஆற்றுகை நிகழ்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.சி.சிறிதரன் அவர்கள் இம் மத்திய கல்லூரி, மாவட்டத்தில் ஒரு முதன்மையான பாடசாலை. கடந்த காலத்தில் இங்கு கல்வி கற்ற மாணவர்கள் பலர் அறிவாளிகளாக, ஆற்றல் உள்ளவர்களாக, தேசத்தைக் காக்கத் தோள் கொடுத்தவர்களாக மிளிர்ந்தனர். பலர் தமது உயிரையும் ஈந்துள்ளனர். இன்று போருக்கு பின்பு நிகழ்ந்த மீள் குடியேற்றத்தின் பின்னர் கல்லூரியின் வளங்களில் பற்றாக்குறை உள்ளபோதும் கல்வியிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் சாதனைகள் படைக்கும் பாடசாலையாக இக்கல்லூரி விளங்குவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இன்றைய மாணவர்கள் தமது தாய்மொழியாம் தமிழை நேசிக்க வேண்டும். தேசப்பற்றும் இனப்பற்றும் இழையோட வாழ வேண்டும். அப்போது தான். எதிர்காலத்தில் அவர்களும் ஆளுமையுள்ளவர்களாக இந்த சமூகத்தை வழிநடத்த முடியும். எனத் தனது உரையில் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்களோடு வலயக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி முருகவேல் அவர்களும், கௌரவ மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை அவர்களும், கரைச்சி பிரதேச சபையின் உபதலைவர் வ.நகுலேஸ்வரனும், பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் சி.லோகேஸ்வரனும் அயல் பாடசாலை அதிபர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டி வெற்றியாளர்கள் வலயக்கல்விப் பணிமனையில் கௌரவிக்கப்பட்ட வேளையில்...



# சிரமதானப் பணியில் பெற்றோர்கள்

02.02.2014 இல் "எமது பாடசாலை. நாமே அழகுபடுத்துவோம்" என்ற தொனிப்பொருளில் எமது பெற்றோர்கள் தாமாக முன் வந்து பாடசாலையின் உட்புறத்தை சுத்தம் செய்து அழகு படுத்தும் நோக்கில் பங்கேற்றனர்.



# கிளிநொச்சியில் நீலங்களின் சமர்...

2005ம் ஆரம்பிக்கப்பட்ட நீலங்களின் சமர் கிரிக்கட் போட்டி, போர் மற்றும் இடப்பெயர்வுகளால் தொடர்ந்து நடைபெறாமல் போயிற்று. மீண்டும் நீண்ட இடைவெளிகளுக்குப் பின் இவ்வாண்டு 30.03.2014ல் சிறப்பாக நடைபெற்றது. கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இக்கடினபந்து கிரிக்கெட் போட்டியில் மத்திய மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது.




இந்நீலங்களின் சமர் போட்டியில் பிரதம விருந்தினராக திரு. லோ.ராம் ரமணன் (உள்ளகக் கணக்காய்வாளர் Rhino roofing products CTD) அவர்களும், சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி சி.எழில்வேல் செந்தில் அவர்களும் திரு.ப ஆனந்தராசா (விளையாட்டு அலுவலர் - வடமாகாணம் ) அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



நீலங்களின் அணித் தலைவராக லகிதரனும் போட்டி முகாமையாளராக ஆசிரியர் ப. ஜோயல்பிய சீலனும் செயற்பட்டனர். ஆட்ட நாயகனாக நிலுக்சன் தெரிவானார். பரிசளிப்பு நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட எமது கல்லூரியின் பழைய மாணவன் திரு.ப.ஆனந்தராசா அவர்களால் விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டது. நீலங்களின் சமர் எனும் தலைப்பிட்டு வரலாற்றுத் தகவல்களைத் தாங்கிய ஒரு கையேடும் வெளியிட்டு வைக்கப்பட்டது.



இரு நாட்களும் இரு கல்லூரிகளும் இணைந்து மிகவும்கோலாகலமாக இப்போட்டியை நடாத்தி நிறைவு செய்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிகளிலிருந்து நிமிருங்கள்

எமது கல்லூரியின் பழைய மாணவரும் ஜோர்தான் நாட்டின் இலங்கைக்கான உதவித்தூதுவராகவும் பணிபுரியும் அகஸ்ரின் கிறிஸ்ரிரூபன் அவர்கள் 18.07.2014 அன்று எமது பாடசாலைக்கு வருகை தந்து காலைப் பிரார்த்தனையின் பின்னர் பிரதான மண்டபத்தில் மாணவர்களுக்கு உரையாற்றினார்.

"வாழ்க்கையில் சோதனை கண்டு துவண்டு விடாமல் விடாமுயற்சியுடன் தொடர்ந்து போராடினால் உங்களது இலட்சியத்தை அடையமுடியும். எனது முன்னேற்றத்துக்கான காரணமான அடிப்படைப் பண்புகளை இப் பாடசாலையிலேயே நான் கற்றுக் கொண்டேன். அதிலும் நாடகத்தில் நான் பங்பற்ற கலை அனுபவம் இன்றும் எனக்குப் பெரிதும் பயன்படுகிறது. நான் படிக்கும்போது படிப்பிலும் அதேநேரம் கலையிலும், விளையாட்டுத் துறையிலும் ஈடுபட்டேன். வெற்றியிட்டினேன். 1990ம் ஆண்டு பரீட்சையில் உயர்சித்தி பெற்று மாவட்ட மட்ட முதல்நிலை பெற்றதற்காக ஜனாதிபதி விருதும் பெற்றேன். நீங்களும் உங்கள் வாழ்க்கையில் இலட்சியத்தில் வெற்றி பெற எனது வாழ்த்துக்கள் என உணர்வு பூர்வமான வகையில் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.



# பகலவன் கவிதைகள்

**கவிதை**

புவியின் வடிவமைப்பை
வரைவதற்கு எறியங்கள் - என்
மனதின் வடிவமைப்பை
வரைவதற்கு கவிதைகள்

**உடல்**

உயிருள்ள போது
இது பெறுமதி
உயிர் அற்றபோது - இது
பிணமடி

**நான்**

என்னாலேயே
எனக்குள்ளேயே
தேடப்படும் ஒரு
உயிரி

**தொலைபேசி**

இருந்தாலும்
இல்லாவிட்டாலும்
உயிர் வருத்தும்
தொல்லைபேசி

# புகைத்தலைத் தடுப்போம்



**"அரிது அரிது மானிடராதல் அரிது அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல்"**

என்றார் அமுதின் இனிய சொற்கிழவியாம் ஔவையார். ஆம் இவ்வுலகில் ஆறாம் அறிவு என்று கூறப்படும் பகுத்தறிவோடு பிறந்தவன் மனிதன். அவனாற் கண்டு பிடிக்கப்பட்டவற்றில் உயிர்களுக்கு ஊறு விளைவிக்கும் சில பயனற்ற பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் தன்னையும் வருத்தி, தன்னைச்சார்ந்த மற்றையோருக்குத் துன்பத்தை விளைவிக்கின்றான். அத்தகைய செயல்களில் ஒன்று புகைத்தல் ஆகும்.

புகைத்தல் எனும் போது தனியே சிகரெட், பீடி, சுருட்டு, சுங்கான் போன்றவை மட்டுமல்ல, தற்காலத்தில் வேறு பலவும் பயன்பாட்டில் உள்ளன. இந்தப் புகைத்தலானது சிறியோர் முதல் பெரியோர் வரை ஆண், பெண் என்ற பாகுபாடில்லாது தன் கைங்கரியத்தை சாதித்து வருகிறது. இதற்காக செலவிடப்படும் பணமானது ஒவ்வொரு குடும்பத்தின் வளர்ச்சிக்கும் தடையாக அமைந்துள்ளது என்பது வருந்தத்தக்கது.

தங்கு தடையற்ற வகையில் புகைத்தலில் ஈடுபடும் மனிதனின் நரம்புகளில் அவனைக் கேளாமலே புகுந்துவிடுவான் புற்றுநோயென்னும் அரக்கன். அவன் அந்த உடலின் எப்பாகத்தையும் தாக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தாலும் விசேடமாக களம், நாக்கு, சுவாசப்பை, இதயம், வாதனாளி, விதைகள், ஈரல், நுரையீரல் என்ற பாகங்களை விரும்பித் தாக்கி அழிக்கின்றான்.

இதை தவிர இன்னும் பல நோக்கங்களாக கண் பார்வைக்குருடு, உயர்குருதியமுக்கம், இதயக் கோளாறு, சுவாசப்பை அழற்சி என்பனவும் உண்டாக புகைத்தலும் காரணமாக அமைகின்றது.



"நல்லதோர் வீணை செய்து - அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ".

ஆம், நல்லதைக்கற்று பணிவோடு வாழ்ந்து அஞ்ச வேண்டியதற்கு அஞ்சி எம்மாலியன்ற நற்பணிகளைப் புரியவல்லவராவதே சிறப்பு.

அவ்வாறாயின் நாம் புகைத்தலைப்பற்றி நினைக்கும் போது அஞ்சவேண்டாமா? உலகில் ஒரு வருடத்திற்கு ஏறக்குறைய 50 லட்சம் மக்கள் புகைத்தல் காரணமாக உடல் நோய்களுக்கு ஆளாகின்றனர். இதில் 60% ஆனோர் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாட்டைச் சார்ந்தவர்களே. புகைத்தலின் போது 4000 வகையான இரசாயனப் பொருட்களும் 400 வகையான தாதுப்பொருட்களும் உடல் நரம்புகளூடாகச் செல்கின்றன. இவையெல்லாம் தற்கால ஆய்வுகள் எமக்குத் தரும் புள்ளி விபரங்களேயாகும். வருடாவருடம் இக்கணக்கு அதிகரித்தே வருகின்றது. குறைவதேயில்லை என்பதாலேயே வைகாசி மாதம் 31ம் திகதி புகைத்தல் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இன்னுமொரு வேதனை கொள்ளவேண்டிய விடயம் புகைப்பவர்களில் 25% ஆனோர் பெண்களாக இருப்பது. பசிவந்தால் மட்டும் தான் பத்தும் பறந்து போகாது. புகைத்தலால்கூட மானம், குலம், கல்வி, வாய்மை, அறிவு, கொடை, தவம், தொழில் முயற்சி, அன்பு என்ற பத்தும் பறந்துவிடும் என இவர்கள் உணரத் தவறிவிட்டனர்.

சிறியோர் முதல் பெரியோர் வரை புகைத்தலின்தீய விளைவுகளை உணரக்கூடிய வகையில் விளம்பரம் செய்யவேண்டும். பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு போட்டிகளை நடாத்தி பரிசில்களை வழங்கவேண்டும். பத்திரிகை, வானொலி ஊடாக புகைத்தல் சார்ந்த தீமைகளை தொடர்ந்து வெளியிடச் செய்து மக்களை விழிப்படையச் செய்யவேண்டும். இவ்வாறான செயற்பாடுகளைச் செயற்படுத்துவதன் மூலம் புகைத்தலை இயன்றளவு குறைக்கலாம். அத்துடன் நாமும் எம்மால் இயன்றவரை இத்தகைய செயற்பாடுகளுக்கு உறுதுணையாய் விளங்கவேண்டும்.

**ஆக்கம் : திலக்ஷனி கணேசலிங்கம்**
**13A கலைப்பிரிவு (2014)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் விழா



தமிழர் திருநாளான தைப்பொங்கல் பாடசாலையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வகுப்பு ரீதியாக மாணவர்கள் பொங்கல் செயற்பாட்டில் ஈடுபட்டனர். கூட்டுப் பொறுப்புடனும் பண்பாட்டு உணர்வுடனும் நடைபெற்ற நிகழ்வில் சில பதிவுகள்....

# கால்கோள் விழா



2014.01.22 இல் தரம் 6 இல் புதிதாக இணைந்து கொண்ட மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவில் மாணவர்களை அழைத்து வரும் காட்சி.....

மாணவர்கள் சிரமதான நிகழ்வில் ஈடுபட்ட வேளையில்.....



# உயர்தர மாணவர் ஒன்று கூடல்

2014ம் ஆண்டுக்கான உயர்தர மாணவர் ஒன்றுகூடல் 05.07.2014 அன்று கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. எமது கல்லூரியின் பழைய மாணவன் இரா. ஸ்ரீஞானேஸ்வரன் ACMA,CGMA (U.S) HNDA, MAAT) அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். பரவிப் பாஞ்சானை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட இவர் தற்போது திருகோணமலையில் பட்டயக் கணக்காளராகவும், மலைமுரசு பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றுகிறார்.

இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக எமது கல்லூரியின் பழைய மாணவனும் கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களகத்தின் தமிழ்பாட ஆசிரிய ஆலோசகருமான திரு.க. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் பழைய மாணவரும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வைத்தியருமான திரு.இ. இதயரூபன் அவர்களும் பழைய மாணவரான பெசன் கனக்ஸன் நிறுவன உரிமையாளர் திரு.B.M.ஜகுபர் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





தமிழ்த்தினப் போட்டி பிரிவு 5 இலக்கணப் மாவட்டம் முதலாம் இடம், மாகாணம் 3ஆம் இடம்பெற்ற யோ.யுசாந்தி.

## சர்வதேச தாய்மொழி தினம்

21.02.2014 அன்று சர்வதேச தாய்மொழி தினத்தை நினைவு கூரும் வகையில் காலை பிரார்த்தனையில் நிகழ்வுகள் நடந்தன. அதிபர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் "தாய் மொழியின் சிறப்பு" என்னும் தலைப்பில் தாய்மொழிப் பற்றின் ஊடாக தேசப் பற்றை வளர்த்தல் தொடர்பாக ஆசிரியர் திரு.அ.சத்தியானந்தம் அவர்களின் உரை இடம் பெற்றது.

## பேச்சுப் பட்டறை



## சமூக விஞ்ஞானப் போட்டி

மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்று மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் தி.தீபிகா (தரம் 6) க.கீதசஞ்சாரன் (தரம் 8) ச.றிக்சன்(தரம்9) வரதாயினி (தரம் 10)ச.விதுலா (தரம் 12) ஆகிய மாணவர்கள் பங்குபற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுக நிகழ்வு



'அவனும் அதுவும்' எனும் இரா.ஸ்ரீ ஞானேஸ்வரனின் (மாயன்) சிறுகதைத் தொகுதி தொடர்பான அறிமுக நிகழ்வு கல்லூரியின் உயர்தர மாணவ மன்றத்தின் ஏற்பாட்டில் 2014.07.10 அன்று நிகழ்ந்தது. நிகழ்வில் ஆசிரியர் அ. சத்தியானந்தம் அவர்கள் அறிமுக உரையை நிகழ்த்த ந.குகபரன் சிறுகதைத் தொகுதி பற்றிய ஆய்வுரையை முன்வைத்தார்.

## பாம்புகளின் சொற்கள்



பாம்புகள் வருகின்றன
எவ்வித அரவங்களுமின்றி.
பாம்புகளின் வார்த்தைகளில்
நச்சு அரிதாரங்கள் மிளிர்கின்றன
சிதறடிக்கும்
நாவுகளைக் காவியபடி
பாம்புகள் அலைகின்றன.
பாம்புகள் மகுடி ஊத , ஊத
ஊழி நர்த்தனமிடுகின்றனர்
மனிதர்கள்
அணில் குஞ்சாயும்
வண்ணத்துப் பூச்சியாயும்
துள்ளிச் சிறகழக்கும்
குழந்தைகளின்
குதிக்காலைத் தீண்டுவதற்காய்
எப்போதும் காத்திருக்கின்றன
பாம்புகள்.

அநாமிகன்

# பேரிகை செய்தி மடல்



கல்லூரியின் வரலாற்றுத் தடத்தில் முதன் முதலாக " பேரிகை " எனும் செய்தி மடல் தனது முதல் வருகையை 06.12.2013 அன்று பதிவு செய்தது. கல்லூரியில் நடைபெறும் சம்பவங்கள், சாதனைகள் என்பவற்றை பதிவு செய்து எதிர்கால ஆவணமாக்கும் கன்னி முயற்சி இது. மேலும் மாணவர்களதும் ஆசிரியர்களதும் படைப்புகளை தாங்கியதாக பேரிகை வடிவமைக்கப்பட்டு வெளியிடப்படுகிறது.

பேரிகை - 1 வெளியீட்டு நிகழ்வு அதிபர் மு.இரவீந்திரன் தலைமையில் இடம் பெற்றது. கிளி/மகா வித்தியாலய அதிபர் அ.பங்கையற் செல்வன் இதழை வெளியிட்டு வைக்க முதல் பிரதியை முன்னாள் பிரதி அதிபரும் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளருமான திரு.செ.விந்தன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.



# டெல்மனோடு சில நிமிடங்கள்...



அயராத முயற்சியினால் மரதன்ஓட்ட வீரனாகி கிளிநொச்சி மண்ணின் பெருமையைத் தேசிய அரங்கில் பதித்தவர் தேவதாஸ் அன்ரனி டெல்மன். வாய்ப்புகளை செம்மையாகப் பயன்படுத்தி வெற்றி பெற்ற இவர் சாதிக்கவேண்டும் என்ற ஓர்மம் உடையவர். வடுக்களைத் தாங்கிய குடும்பத்தில் இருந்து வந்தவர்.



**உங்கள் வீட்டுச் சூழல் குறித்துக் கூறுங்கள்**

எனது குடும்பத்தில் அம்மா, அப்பா உட்பட ஐந்து பேர். அப்பாவிற்கு ஒரு காலில் பாதிப்பு உள்ளது. எனது மூன்றாவது தம்பி தீக்காயத்திற்கு உள்ளாகியதால் அவர் வாய்பேச முடியாதவராக உள்ளார். எனது தங்கை டென்சிகா தரம் 9 இல் கல்வி கற்கிறார். அவரும் மாகாணமட்டத்தில் 400m ஓட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்றவர்.

**உங்கள் விளையாட்டுத்துறை அனுபவம் குறித்து...**

அப்பா தடகள விளையாட்டு வீரர். எனக்கு சிறுவயதிலிருந்தே விளையாட்டுத்துறையில் அதிக ஆர்வம் இருந்தது. நான் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாகாணமட்ட மரதன் ஓட்டத்தில் முதற் தடவையாகப் பங்குபற்றியபொழுது 11வது இடத்தினைப் பெற்றேன். ஆனால் மனம் சோரவில்லை. தொடர்ந்து உழைத்தேன். அடுத்த வருடம் மாகாணமட்ட மரதனில் 1 இடத்தைப் பெற்றேன். இதுவரை இருதடவைகள் மாகாண மட்டத்தில் முதலிடங்கள் கிடைத்துள்ளன. 2013 இல் தேசிய மட்டத்தில் 2ஆம் இடத்தினைப் பெற்றமை எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத்தந்தது.

**உங்களுக்கு உதவியாக இருப்போர்.......**

எனது பெற்றோர் எனக்கு நம்பிக்கையளித்தனர். பாடசாலைச்சமூகம் உற்சாகத்தை வழங்கியது. பாடசாலையின் விளையாட்டுத்துறை ஆசிரியர்கள், பயிற்றுநர் திரு. ந. முகுந்தன் ஆகியோரின் வழிப்படுத்தலே எனது வளர்ச்சிக்கும் வெற்றிக்கும்ஆதாரமாகும்.

**உங்களது எதிர்கால இலட்சியம். பற்றி...........**

எந்தவொரு பதற்றமும் இல்லாமல் போட்டிகளில் பங்குபற்றி நல்ல நிலையை அடைய வேண்டும். எதிர்காலத்தில் எமது சமூகத்தில் ஒரு விளையாட்டுத்துறைப் பயிற்றுநராக வரவேண்டும் என்பதே எனது இலட்சியம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லண்டனிலும் மலேசியாவிலும் எமது வீரர்கள்



அகில இலங்கை ரீதியாக பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற முரளிகிண்ண துடுப்பாட்டப் போட்டியில் சிறப்பாகத் துலங்கிய எமது பாடசாலையைச் சேர்ந்த ஜெ.ஜெனுசன் ச.லகிதரன் ஆகியோர் மலேசியா. மற்றும் லண்டன் ஆகிய நாடுகளில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பினைப் பெற்றனர். அவர்களை கௌரவித்த வேளையில்..

## கடைக்குள் புகுந்தது பேருந்து

தினமும் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து வன்னி மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களை ஏற்றி வந்த பேருந்து ஈருருளியில் வீதியைக் கடக்க முயன்ற மாணவரோடு மோதுவதைத் தவிர்க்கும் நோக்குடன் பேருந்தின் சாரதி விரைந்து செயற்பட்டபோது வேகக்கட்டுப்பாட்டை இழந்து கடைக்குள் புகுந்தது. இவ்விபத்தில் 25 மேற்பட்ட ஆசிரியர்கள் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் எமது பாடசாலையைச் சார்ந்த திரு. தி. ஜங்கரன். திரு. வ.முரளிஹரன். திரு.கி. அனந்தகோபன் திரு. யோ. கஜன். திரு. ந.குகபரன். திருமதி சா. அருட்செல்வம் ஆகிய ஆசிரியர்களும் அடங்குவர்.




## க.பொ.சா.த பெறுபேறு 2012 - 2013 ஒரு பார்வை


| | 2012 | 2013 |
|---|---|---|
| கணிதம் | 34% | 54% |
| தமிழ் | 60% | 75% |
| விஞ்ஞானம் | 38% | 53% |
| சைவசமயம் | 92% | 96% |
| கிறிஸ்தவம் | 80% | 78% |
| றோமன்கத்தோலிக்கம் | 83% | 100% |
| ஆங்கிலம் | 06% | 28% |
| வரலாறு | 32% | 47% |
| புவியியல் | 48% | 50% |
| முயற்சியாண்மை | 52% | 63% |
| வணிகம் | 44% | 85% |
| குடியுரிமை | 63% | 90% |
| சங்கீதம் | 83% | 64% |
| சித்திரம் | 45% | 58% |
| நடனம் | 57% | 75% |
| இலக்கிய நயம் | 65 % | 100% |
| நாடகமும் அரங்கியலும் | 90% | 97% |
| ICT | 100% | 97% |
| விவசாயம் | 50% | `48% |
| மனைப்பொருளியல் | 50% | 55% |
| சுகாதாரம் | 83% | 88 % |



மாவட்ட மட்டப்போட்டியில் முதலிடத்தைப் பெற்று மாகாணமட்டப்போட்டியில் கலந்துகொண்ட விவாத அணியினர்.

## கீர்த்தனை

இராகம் :- ஹம்ஸானந்தி
தாளம் :- ஆதி
ஆரோகணம் :- ஸரிகமதநிஸ்
அவரோகணம் :- ஸ்நிதமகரிஸ



**பல்லவி**

சுருதி லயம் விலகாத சங்கீதமே - என்
வாழ்வினில் நிலைத்திட அருள்வாயம்மா (சுருதி)

**அனுபல்லவி**

நாதத்தின் வடிவான சப்தஸ்வரங்கள்
நாவினில் ஒலித்திட வரம் தருவாய் (சுருதி)

**சரணம்**

ராகங்கள் பல கோடி எழுகின்றதே
பாமாலை புனைந்தேத்தி பாடவே
பாடிடும் புகழ்மாலை உனதன்றோ
உன்பாதக் கமலத்தில் சூட்டிடுவேன் (சுருதி)

திருமதி.க.பகீரதன்
(ஆசிரியை)

## சட்டம்



கோழைக்கு போர்க்களம்
கோடீஸ்வரனுக்கு
மாளிகை வாசம்

சட்டம் ஒருமைப்பாட்டுக்கு
உருவாக்கப்பட்டதா?
இல்லை
பஞ்சத்தால் பழிவாங்கப்பட்டவருக்கு
உருவாக்கப்பட்டதா?

பொருளாதார மிருகம்
வறுமையுடை வயிறுகளை
அதிகாரத்தின் கால் கொண்டு
நசிப்பது தான் சட்டமா?

விபசாரம் செய்தவள் மீது
கற்கள் வீசப்பட்டபோது
"பாவம் செய்யாதவர் எவராவது
இருந்தால் இவள் மீது கற்களை
வீசுங்கள்" என்றார் இயேசு

காக்கிச் சட்டைக்கும்
காசுள்ளவனுக்கும்
சட்டம் தான் கவசம்
இந்தச்சட்டம் சமூகத்தின்
ஒழுக்கத்தையோ. நீதியையோ
காப்பாற்றவில்லை
ரத்தத்தில் தோய்ந்த
ஆடைகளை இது தான் நெய்து
கொடுத்தது நமக்கு.

வலுவிழந்தோன்
சட்டத்துக்குள்
ஊன்று கோல் தேடுகிறான்
வல்லமையுள்ளோன்
சட்டத்தை போர்வைகளாக்குகிறான்

வலியோடு வாழும்
ஏழைகளை சட்டத்தால் சிதைக்காது
வாழ்வதற்கு வழி செய்வீர்

சு. ஜனனி
2015 தொழில்நுட்ப பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தரப் பரீட்சை 2013இல் பிரிவு ரீதியான உயர்பெறுபேறுகள்

### கணிதம்

| | | | |
|---|---|---|---|
| சந்திரசேகரம் பானுப்பிரியன் | - | 3A | மாவட்ட நிலை 2 |
| ஜோசப்தாசன் நீல்மாறன் | - | 3A | மாவட்ட நிலை 3 |
| குலசேகரம் சிந்துலன் | - | 2AB | மாவட்ட நிலை 4 |
| குமார் கீர்த்தனன் | - | 2AB | மாவட்ட நிலை 5 |
| சிவானந்தமூர்த்தி துளஜிகன் | - | 2AB | மாவட்ட நிலை 6 |

### உயிரியல் பிரிவு

| | | | |
|---|---|---|---|
| நாகேஸ்வரன் சுடர்வண்ணன் | - | 2AB | மாவட்ட நிலை 1 |
| கிறிஸ்ணசாமி தர்ஷிகா | - | 2AC | மாவட்ட நிலை 3 |
| இராஜேந்திரன் தர்ஷானி | - | 2BC | மாவட்ட நிலை 6 |
| ஜெயராஜ் தர்ஷிகன் | - | B2C | மாவட்ட நிலை 9 |

### வர்த்தகப் பிரிவில்

| | | |
|---|---|---|
| தேவராசா கமலராஜ் | - | 2BC |
| துரைலிங்கம் விஷ்ணுவர்த்தனன் | - | 3C |
| செல்வராசா கேதீஸ்வரன் | - | C2S |



### கலைப்பிரிவு

| | | | |
|---|---|---|---|
| முத்துசாமி டிலோசன் | - | 2AB | மாவட்ட நிலை 5 |
| அன்னக்கொடி சுவேதா | - | 2AB | மாவட்ட நிலை 11 |
| குபேந்திரன் ஜெசிந்தா | - | 2AB | மாவட்ட நிலை 12 |
| பரமேஸ்வரன் துசானி | - | 2AB | மாவட்ட நிலை 18 |
| கந்தலிங்கம் கீர்த்திகா | - | A2B | மாவட்ட நிலை 21 |
| மாணிக்கம் புவனேஸ்வரி | - | ABC | மாவட்ட நிலை 24 |

## தமிழ்த்தினப் போட்டி - 2014
## தேசிய மட்டம்



**தனிநடனம் பிரிவு 4 இல்** தேசிய , மாகாண மட்டத் தில் முதலிடத்தைப் பெற்ற **அஜித்குமார்,** பிரிவு 5 இல் தேசிய மட்டத்தில் 2 ஆம் இடத்தையும் மாகாண மட்டத்தில் 1 ஆம் இடத்தையும் பெற்ற **பா. சிந்துஜா**



தேசிய மட்டத்தில் 3ஆம் இடத்தையும் மாகாண மட்டத்தில் 1ஆம் இடத்தையும் பெற்ற **யோ.யுசாந்தி, செ.விசாளினி, ம.மைதிலி, மு.கஜமுகன், மு. நித்தியமலர் ஆகியோர்**



**கவிதை பிரிவு 5 இல்**
தேசிய மட்டத்தில் 3 ஆம் இடத்தையும் மாகாண மட்டத்தில் 1ஆம் இடத்தையும் பெற்ற **சு. ஜனனி**




மாகாணமட்ட நாட்டிய நாடகத்தில் 2 ஆம் இடத்தினைப் பெற்ற அணியினர்

## 2014ம் ஆண்டுக்கான வருட இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி

06.02.2014 அன்று எமது கல்லூரி மைதானத்தில் மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவர் வைத்தியர் முருகேசு சிறிதர் அவர்கள் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும் கரைச்சி பிரதேச விளையாட்டு உத்தியோகத்தருமான திரு. S. குமார் அவர்களும் கலந்து சிறப்பித்தார். இடைவேளையின்போது மாணவர்களின் உடற்பயிற்சிக் கண்காட்சி எல்லோருக்கும் இனிய விருந்தளித்தது. விநோத உடை நிகழ்வு தத்ரூபமான கருப்பொருள்களுடன் நிகழ்ந்தப்பட்டது. முன்னதாக பிரதம விருந்தினர்களும், சிறப்பு விருந்தினர்களும் அதிபர் தலைமையில் பாண் [illegible] குழு செயலாளராக [illegible]








### மாகாணமட்டத் தடகளப் போட்டியில் சாதனை படைத்த வீர - வீராங்கனைகள்



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 வயது ஆண் - ச.ரேனுஜன் | - | 400m | - | 2 | ஆம் இடம் |
| 15 வயது பெண் - தே.டென்சிகா | - | 400m | - | 1 | ஆம் இடம் |
| 21 வயது ஆண் - தே.அன்ரனிடெல்மன் | - | 5000m | - | 1 | ஆம் இடம் |
| | | 1500m | - | 2 | ஆம் இடம் |
| 21 வயது ஆண் - எஸ்.வரதன் | - | 1500m | - | 1 | ஆம் இடம் |
| | | 800m | - | 3 | ஆம் இடம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at: ANDRA Printers, No. 356A, Kasthuriyar Road, [illegible]